வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். C.C. 268/2021

வழக்கு சாட்சி- **அ.சா.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ்வரன் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | இராஜேந்திரன் | : | தொழில் | காய்கறி வியாபாரம் |
| கிராமம் | திருக்காட்டுப்பள்ளி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 27/2024 |

(எதிரி ஆஜர்.)

**நாள் : 20.08.2024**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகின்றேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 07.08.2021ம் தேதி விபத்து நடந்தது. சம்பவம் குறித்து பார்க்கச் சென்றேன். என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது நான் அளித்ததுதான். அந்த பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2/அ.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 07.08.2021 ஆம் தேதியன்று நடைபெற்ற விபத்து வழக்கிற்கு

08.08.2021ம் தேதி அன்று திருக்காட்டுப்பள்ளி போலீசார் சம்பவ இடம் வந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், பாண்டியனும் கையெழுத்து செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து, எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**